**கவனிக்க.-** - *2018.04.06 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2067 - 2018 අප්‍රේල් මස 12 වැනි බ්‍රහස්පතින්දා - 2018.04.12

*2067ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 732 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது *2018, மே மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு***

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

729 - B81271 - 5403 (2018/04)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணினி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவி மற்றும் ஆரம்ப தர அரை தொழில்நுட்ப சேவைப்பிரிவிற்குரிய (PL - 02 - 2006) பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர், பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2018

சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவி மற்றும் ஆரம்ப தர அரை தொழில்நுட்பம் PL - 02 - 2006 சேவைப்பிரிவிற்குரிய பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை திறந்த அடிப்படையில் நிரப்புவதற்கு தகைமைகளை கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**02. பதவிக்குரித்தான கல்வித்தகைமைகள் :**

அ. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவிக்கு சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் இன்னும் இரு பாடங்களில் திறமை சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

கல்விப் பொதுத்தராதர (உயர் தரம்) பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலாவது (சாதாரண பொது அறிவுப்பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

ஆ. ஆரம்ப தர அரை தொழில்நுட்பம் PL-02-2006 சேவைப்பிரிவிற்குரிய பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர் பதவிகளுக்கு -

கல்விப் பொதுத்தராதர (சாதாரண தரம்) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் திறமை சித்திகள் இரண்டுடன் (02) ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**03. தொழிற்தகைமைகள் :**

அ. முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவிக்கு தொழிற்தகைமை உரித்தில்லை.

ஆ. ஆரம்ப தர அரை தொழில்நுட்ப சேவைப்பிரிவிற்குரிய பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர் பதவிகளுக்கு-
மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக் குழுவினால் வழங்கப்பட்ட தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் 2 அல்லது 3 ஆவது மட்டத்திற்கு குறையாத மட்டத்தில் (NVQ 2 அல்லது NVQ 3) பெற்றிருத்தல்.

**குறிப்பு :**

தேசிய தொழிற்தகைமை (NVQ 2 அல்து NVQ 3) சான்றிதழ் கொண்ட போதியளவு விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் கல்வித்தகைமைகளை மாத்திரம் கொண்டுள்ள விண்ணப்ப தாரிகளுள் நிறமை ஒழுங்குவரிசைப்படி பதவிக்காக இணைத்துக்கொள்ளப்படும்.

**04. அனுபவம் :**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவி மற்றும் ஆரம்ப தர அரை தொழில்நுட்ப சேவைப்பிரிவிற்குரிய பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர் பதவிகளுக்கு அனுபவம் உரித்தில்லை.

**05. ஏனைய தகைமைகள் :**

(அ) 2018.05.14 ஆந் திகதிற்கு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும் என்பதுடன், ஆரம்ப தர அரை தொழில் நுட்ப சேவைப்பிரிவிற்குரிய பரிசாரர், தொலைபேசி இயக்குனர் சமையலாளர் பதவிகளுக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(ஆ) வார்ட்டு எழுதுனர் பதவிக்கு பெண் விண்ணப்பதாரிகள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(இ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரி சிறந்த நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

(உ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு ஆட்சேர்ப்பிற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் தேவையான பிரகாரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஊ) இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும், பதவிக்குரிய கடமைகளை செய்வதற்கும், போதியளவு உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

**06. விண்ணப்பிக்கும் முறை :**

(அ) விண்ணப்பப்படிவம் இந்த அறிவிப்பில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் ஏ-4 அளவினையுடைய கடதாசியின் இரண்டு பக்கங்களையும் உபயோகித்து முதல் பக்கம் 1.0 இலிருந்து 5.1 வரையிலும், இரண்டாம் பக்கம் 5.2 இலிருந்து 9.0 வரையிலும் என்ற முறையில் தயாரித்து தமது கையெழுத்தில் பூரணப்படுத்தப்படல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பத்தில் ''பற்றுச்சீட்டு'' எனும் இடத்தில் இலங்கை வங்கி தப்ரோபேன் கிளையில் இலக்கம் 7041318 எனும் ''சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் - பரீட்சைக் கட்டணம் சேகரிப்பு'' எனும் கணக்கிற்கு ரூபா 200 வைப்பில் இட்டு பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கழராவண்ணம் ஒட்டுதல் வேண்டும். பதவிகள் பலவற்றுக்கு விண்ணப்பிப்பதாயின் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறாக கட்டணம் மேற்கொள்ளப்படல் வேண்டும். (பற்றுச்சீட்டை ஒட்டுவதற்கு முன்னர் அதன் பிரதியொன்றை பெற்றுக் கொள்ளவும்)

(இ) விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/சத்திய ஆணையாளர்/சட்டத்தரணி/ பிரபல நொத்தாரிசு/ முப்படை அதிகாரி/ பொலிஸ் பதவியில் வர்த்தமானி அறிவிப்பு வழங்க அதிகாரமுள்ள உத்தியோகத்தர் அல்லது ரூபா 334,452.00 இற்கு மேற்பட்ட வருட ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(ஈ) முறையாக பூர்த்தி செய்த விண்ணப்பங்கள் 9''x4'' அளவினைக் கொண்ட கடித உறைகளில் இட்டு இக்கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''.................................பதவிக்கான ஆட்சேர்ப்பு 2018'' என குறிப்பிட்டு 2018.05.14 ஆந் திகதிக்கு முன்னர் ''பணிப்பாளர் (நிர்வாகம்) 03, சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, ''சுவசிறிபாய'', இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 '' எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

07. ஏற்கனவே அரச சேவையில் அல்லது அரச சார்பு நிறுவனங்களில் சேவையாற்றும் அலுவலர்கள் இதற்காக விண்ணப்பிப்பதாயின் அவ் அலுவலர்கள் தமது திணைக்களத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

08. விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது என்பதுடன், குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். மேற்படி நிபந்தனைகளுக்கு மற்றும் மாதிரிப் விண்ணப்பப் படிவத்திற்கு அமையாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**09. ஆட்சேர்ப்பு முறை :**

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வார்ட்டு எழுதுனர் பதவிக்கு தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கிடையில் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூலம் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் கூடிய புள்ளிகளைப் பெற்ற போட்டியாளர்கள் உடற்தகுதி மற்றும் தகைமைகள் என்பன பரிசீலிக்கும் நேர்முகப்பரீட்சையின் பின் மேற்குறிப்பிட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அமைய IIIஆம் தரத்திற்கு இணைக்கப்படுவதுடன், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் கடிதம் மூலம் அறிவிக்கப்படுவதுடன், பெறுபேறுகளின் பட்டியல் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரிசாரர், தொலைபேசி இயக்குனர் பதவிக்கு தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூலப் பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் அவர்கள் பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசைப்படி இணைக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் கடிதம் மூலம் அறிவிக்கப்படுவதுடன், பெறுபேறுகளின் பட்டியல் www.health.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

**குறிப்பு.1** : பரிசாரர் பதவிக்கு தெரிவு செய்யப்படும் ஊழியர்களுக்கு மூன்று மாத கால பயிற்சியொன்று வழங்கப்படும். திறந்த அடிப்படையில் இணைத்துக்கொள்ளப்பட்டு பயிற்சி பெறும் ஊழியர்கள் பயிற்சிக்காலத்தின் போது பயிற்சி நிறுவனத்தின் ஒழுங்கு விதிகள், விடுமுறைகள் தொடர்பாக விதிமுறைகளை கடைப்பிடிக்காத அல்லது பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத ஊழியர்களின் பயிற்சி நியமனம் இரத்துச்செய்யப்படும்.

அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சமையலாளர் பதவிக்கு தகைமைகளையுடைய விண்ணப்பதாரிகளுக்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூல பரீட்சை மற்றும் தொழில்முறை சோதனையின் பெறுபேறுகளின் பிரகாரம் இணைத்துக் கொள்ளப்படும். முதலில் எழுத்து மூல பரீட்சை நடாத்தப்படுவதுடன் அதில் சித்தியடையும் அவர்கள் பெற்ற புள்ளிகளின் திறமை ஒழுங்குவரிசைப்படி தொழில்முறை சோதனைக்காக அழைப்படுவர் அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சைமற்றும் தொழில்முறை சோதனையின் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் கூட்டுத்தொகையின் திறமை ஒழுங்குவரிசைப்படி சமையலாளர் பதவிக்கு இணைக்கப்படும்.

10. எழுத்துப் பரீட்சை தொடர்பான விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) வார்ட்டு எழுதுனர் பதவிக்கு:

| வினாப் பத்திரத்தின் பெயர் | விடயம் | காலம் | அதி கூடிய புள்ளி | சித்தி பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| i. பொது அறிவு | உரிய துறை தொடர்பாக அபேட்சகர் வெளிக் காட்டும் திறமை மற்றும் பொது அறிவை பரிசீலித்தல் | 02 மணித்தியாலம் | 100 | 40% |
| ii. நுண்ணறிவு | சொற்கள் மற்றும் உருவமாக வழங்கும் சிக்கல் தொடர்பாக அபேட்சகர் வெளிப்படுத்தும் ஆற்றல் மற்றும் வெளிப்படுத்தும் பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளும் ஆற்றல், குறிப்பிட்ட கால எல்லை மற்றும் சந்தர்ப்பத்திற்குள் தொடர்பை விளங்கிக்கொள்வதை அபேட்சகர் கொண்டுள்ள திறமையை கணிப்பிடுதல் | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

- அனைத்து எழுத்து மூலமான விடைப்பத்திரத்தில் தெளிவற்ற எழுத்துகள் மற்றும் எழுத்துப் பிழைகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

- மேற்குறித்த ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகளை பெறல் வேண்டும். திறமை அடிப்படை மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கேற்ப நியமனங்கள் வழங்கப்படும்.

(ஆ) பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர் பதவிகளுக்கு :

| வினாப் பத்திரத்தின் பெயர் | விடயம் | காலம் | அதி கூடிய புள்ளி | சித்திபெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| விடயம் பற்றிய அறிவு | பதவியுடன் தொடர்புடைய கடமைகள் பற்றிய அறிவு, உபகரண பயன்பாடு, தொழிலின் போது தொழில்நுட்ப பாதுகாப்பு மற்றும் தொழில்சார் அறிவு | 1 1/2 மணித்தியாலம் | 100 | 40% |

11. சமையலாளர் தொழில்முறை சோதனை தொடர்பான விபரங்கள் கீழுள்ளவாறு ஆகும்:

| வினாப் பத்திரத்தின் பெயர் | விடயம் பற்றிய அறிவு | அதிகபட்ச புள்ளி | மொத்தப் புள்ளி | சித்தி பெற வேண்டிய புள்ளி |
|---|---|---|---|---|
| விடயம் தொடர்பான அறிவு(பதவிக்கு உரித்தான தொழில்நுட்ப விடயங்கள், உபகரணங்களை இனங்காணுதல், பொருத்துதல் பழுது பார்த்தல் | 1. துறைக்கு அவசியமான ஆரம்ப அறிவு | 20 | 100% | 40% |
| | 2. உபகரணம் பொருத்துதல், பழுதுபார்த்தல் தொடர்பான அறிவு | 20 | | |
| | 3. உரிய துறைக்கான உபகரணங்களின் பிழைகளை இனங்காணல் | 40 | | |
| | 4.துறைக்குரிய உபகரணங்களின் பாவனை தொடர்பான அறிவு | 20 | | |

**12. பரீட்சார்த்திகளின் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தல்.**

சகல விதத்திலும் சரியான விண்ணப்பங்களை சமர்ப்பித்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப்பரீட்சைக்கு அழைக்கப் படுவர். எழுத்துமூல பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு கீழ்க் குறிப்பிடப் பட்டுள்ள ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஆட்பதிவு ஆணையாளரினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆளடையாள அட்டை;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்;

13. சேவையில் ஈடுபடுத்துவதற்கான மற்றும் சேவை நிபந்தனைகள்:

(அ) இப்பதவி ஓய்வூதியத்துடன் கூடியதாகும். உங்களுக்கு உரித்தான ஓய்வூதிய சம்பளமுறை தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு நீங்கள் கட்டுப்படல் வேண்டும்.

(ஆ) இப்பதவி 03 வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும்.

(இ) பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 01/2014 இன் பிரகாரம் அல்லது அதனுடன் தொடர்புள்ள சுற்றறிக்கையின் பிரகாரம் இப்பதவிக்கு உள்வாங்கப்பட்டு 05 வருடங்களுக்குள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொழிக்கு மேலதிகமாக ஏனைய அரச கரும மொழியில் தேர்ச்சி பெறல் வேண்டும்.

(ஈ) 03 வருடத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

(உ) வார்ட்டு எழுதுனர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு - 2 சேவையின் ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கும், பரிசாரர், தொலைபேசி இயக்குனர் மற்றும் சமையலாளர் பதவிகளுக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் ஆரம்ப தர அரை தொழில்நுட்ப சேவைப்பிரிவிற்குரிய ஆட்சேர்ப்பு விதிமுறைகளுக்கும், மற்றும் அதனுடன் தொடர்பான காலத்துக்குக் காலம் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள், தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணம், அரச சேவை ஆணைக்குழுவின் சேவை நிபந்தனை மற்றும் அரசினால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் விதிமுறைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

14. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் அமையாத, தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யாத, முறையாக பூரணப்படுத்தப்படாத விபரங்கள் குறிப்பிடப் பட்டுள்ள மற்றும் தாமதித்து கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் என்பன எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமை அறிவிக்கப்படமாட்டாது. தபாலில் ஏற்படும் தாமதம் மற்றும் காணாமல் போதல் என்பவை தொடர்பான எவ்வித முறைப்பாடுகளும் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

15. பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்ற தொகை தீர்மானிக்கப் படுவது அச் சந்தர்ப்பத்தில் நிலவும் வெற்றிடங்களுக்கேற்ப ஆகும். அதன் பிரகாரம் பதவிக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்கு சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர் தீர்மானித்தால் ஆட்சேர்ப்புத் திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு அமைய அப் பதவியின் III ஆம் தரத்தின் வெற்றிடங்களுக்கு அமைய நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரிசாரர், தொலைபேசி இயக்குனர் மற்றும் சமையலாளர் பதவிகளுக்கான பொது நிருவாக சுற்றிக்கை 03/ 2016 பிரகாரம் PL 02 - 2016 இற்கு உரித்தான ரூபா 25,250 - 10X270 - 10X300 - 10X330 - 12 X 350 - ரூபா 38,450 உரித்துடையவர் என்பதுடன், சம்பளம் வழங்குதல் அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இற்குஅமைய மேற்கொள்ளப்படும். அவ்வாறே வார்ட்டு எழுதுனர் பதவிக்கு பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 பிரகாரம் MN 01 - 2016 இற்கு உரித்தான ரூபா 27,140 - 10X300 - 11X350 -10X495 - 10X660 - ரூபா 45,540.00 உரித்துடையவர் என்பதுடன், சம்பளம் வழங்குதல் அச் சுற்றறிக்கையின் அட்டவணை II இற்குஅமைய மேற்கொள்ளப்படும்.

16. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் பற்றிய விபரங்கள் விண்ணப்பத்தை நிரப்பும்போது மிகவும் கவனத்தில் எடுத்து சரியாக உள்வாங்கப்படல் வேண்டும். நியமனம் வழங்கப்பட்ட பின்னர் தகைமைகளை பரிசீலிப்பதற்காக சமர்ப்பிக்கும்போது சான்றிதழ் பொய் அல்லது பிழையானவையென தெரியவருமிடத்து, சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்காக குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்திற்கு வழங்கப்படுவதுடன், வழங்கப்பட்ட நியமனம் இரத்துச்செய்து பதவியிறக்கம் செய்யப்படுதல் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, மீண்டும் அரச சேவைக்கு இணைய முடியாதவாறு கருப்புப்பட்டியலில் பெயர் உள்வாங்குவ தற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

17. இந்த வர்த்தமானி அறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனுமோர் விடயம் தொடர்பான இறுதித்தீர்மானம் சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் செயலாளருடையது என்பதுடன், வெற்றிடங்களை நிரப்புவது அல்லது நிரப்பப் படாமல் விடுவது அல்லது வெற்றிடங்களின் ஒருபகுதியை நிரப்புவது தொடர்பான இறுதித் தீர்மானம் சுகாதார செயலாளருடையது.

18. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஏதாயினுமொரு வித்தியாசம் அல்லது ஒன்றுக்கொன்று முரணாக ஏற்படுமிடத்து சிங்கள மொழியில் குறிப்பிட்டவையே செல்வாக்குடையதாகும்.

ஜனக்க சுகததாஸ,
செயலாளர்,
சுகாதார, போசணை மற்றும் சுதேச
வைத்திய அமைச்சு.

2018, மாச்சு 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு**

முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாத குழு 02 சேவைக்குரிய வார்ட்டு எழுதுனர் பதவி மற்றும் ஆரம்ப தர அரை தொழில்நுட்ப சேவைப்பிரிவிற்குரிய (PL - 02 - 2006) பரிசாரர், தொலைபேசி இயக்குனர், சமையலாளர். பதவிகளுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு - 2018

பரீட்சைக்கு கோருகின்ற பதவி

பரீட்சைக்கு தோற்றும் மொழி :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3
(உரிய இலக்கத்தை பெட்டியில் எழுதவும்)

01. a. முதலெழுத்துக்கள் பின்னால் வருமாறு விண்ணப் பதாரியின் பெயர் : (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்)
உதா :- SLIVA A.D. ______ .
Mr/Mrs/Miss : ______ .

b. முழுப் பெயர் : (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ______.

c. முழுப் பெயர் : (சிங்களத்தில்/தமிழில்).

02. i. நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்): ______.
ii. நிரந்தர முகவரி : (சிங்களத்தில்/தமிழில்) ______ .
iii. வதிவிட மாவட்டம்.
iv. தோலைபேசி இலக்கம் ______ .
v. அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்தில்) ______ .

03. பிறந்த திகதி :
வருடம் : மாதம் :
திகதி:

i. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

ii. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்தன்று வயது : வருடங்கள்: மாதங்கள்:

நாட்கள்:

04. நீங்கள் இலங்கைப் பிரஜையா? : ஆம் இல்லை
(உரிய பெட்டியில் அடையாளம் இடவும்)

05. கல்வித்தகைமை (உரிய சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்):

i. க.பொ.த. (சா.த.) பரீட்சை:

ஆண்டு ______ . சுட்டெண் ______ .

| | பாடம் | சித்தி | | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 01 | | | 06 | | |
| 02 | | | 07 | | |
| 03 | | | 08 | | |
| 04 | | | 09 | | |
| 05 | | | 10 | | |

ii. க.பொ.த. (உ.த.) பரீட்சை இலக்கம் :- ______ .
வருடம் :- ______ .

| | பாடம் | சித்தி | | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 01 | | | 03 | | |
| 02 | | | 04 | | |

iii. அனுபவம் : ஆம் இல்லை
(உரிய பெட்டியில் ✓ அமையாளம் இடவும்)

உரிய விபரத்தைக் குறிப்பிடவும் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தவும்)

iv. தொழிற்தகைமை (பதவிக்கு உரித்தான) :
ஆம்: இல்லை:
(உரிய பெட்டியில் ✓ அடையாளம் இடவும்)

உரிய விபரத்தைக் குறிப்பிடவும் (சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தவும்)

06. நீங்கள் ஏதாவது குற்றத்திற்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளீரா ?

ஆம் : இல்லை:
(உரிய பெட்டியில் ✓ அமையாளம் இடவும்)
ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும் : ______ .

07. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வியரங்கள் எனது அறிவுக் எட்டிய அளவில் உண்மையானதும், உரிய பரீட்சை கட்டணம் செலுத்தி பற்றுச்சீட்டு இங்கு ஒட்டியுள்ளதையும் உறுதி செய்கிறேன். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விபரம் பிழை அல்லது தவறு என காணப்படுமிடத்து தேர்ந்தெடுப்பதற்கு முன்னர்

கண்டுபிடிக்கப்பட்டால் இவ்விண்ணப்பம் நிராகரிக்கப் படும் எனவும், தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின் எனின் நான் சேவையிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நன்கறிவேன்.

| பணம் செலுத்திய பறறுச்சீட்டை இங்கு ஒட்டவும். அதன் நிழற் பிரதியொன்றை தம்மிடம் வைத்திருக்கவும். |
|---|

______________________,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ______ .

08. விண்ணப்பதாரியின் ஒப்பத்தினை உறுதிப்படுத்தல்:- இந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்த திரு./ திருமதி/ செல்வி ........................................................ அவர்களை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் ........................ திகதி எனது முன்னிலையில் அவரது கையொப்பத்தினை இட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

______________________,
உறுதிப்படுத்துபவரின்
கையொப்பம்.

திகதி : ______ .

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின்,
முழுப் பெயர்:______ .
பதவி: ______ .
முகவரி: ______ .
(பதவி முத்திரை இட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.)

09. ஏற்கனவே அரச அல்லது அரச சார்பான நிறுவனங் களில் கடமை புரியும் உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உரித்தானது.

திணைக்கள/ நிறுவனத்தலைவரின் சான்றிதழ்:

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பித்த திரு./திருமதி/செல்வி ........................................................ அவர்கள் ...................................... திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................ திகதியில் இருந்து ................. திகதி வரை .............................. ஆக சேவையாற்றுகின்றார் என்பதுடன், அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் உள்ளது/ இல்லை. அவரது வேலை, நடத்தை மற்றும் வரவு திருப்திகரமானது/ திருப்தியில்லை. உரிய கட்டணம் செலுத்திப் பற்றுச்சீட்டை ஒட்டியுள்ளார் எனவும், அவர் ....................... பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் இந்த திணைக்களத்தில்/ நிறுவனத்தில் இருந்து விடுவிப்பு செய்ய முடியும்/ முடியாது என்பதை அறியத்தருகின்றேன்.

______________________,
திணைக்கள/ நிறுவனத்தலைவரின்
கையொப்பம்.

4-495

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.